**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **P.W.1** | **பெயர் : ஆதிலிங்கம்**<br>**த/பெ : குமாரசாமி** | **OS.No. 84/2019** | **14.11.2025** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை)

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 ஆவணம் 01.03.2017 தேதியிட்ட பதிவு செய்யாத கிரைய ஆவணத்தை பதிவு செய்ய கேட்டு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் 2ம் பிரதிவாதிக்கும் என்ன தொடர்பு என்றால் 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்களுக்கு பதிவு செய்து தருவதாக கூறினார், ஆனால் பதிவு செய்து தரவில்லை, மாறாக 2ம் பிரதிவாதிக்கு பதிவு செய்து தந்துவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் பிரதிவாதி தரப்பினராக உள்ளாரா என்றால் இல்லை, அவர் ஒரு தரப்பினராக வரவும் முடியாது.

01.03.2017ல் வா.சா.ஆ.1 தயார் செய்தபிறகு பத்திர அலுவலகத்தில் 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் "தபசில் கண்ட கடை கட்டிடம் மனை நிலம் வகையறாவுக்கு கிரைய தொகையாக பெற்றுக் கொண்டது ரூ.75,000/- இது முன்னமே எனது குடும்ப செலவு வகைக்கு ரொக்கம் பெற்றுக் கொண்டபடியால்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 01.03.2017ல் 1ம் பிரதிவாதி பணம் கொடுத்ததாக பணபற்று விபரம் எதுவும் துலங்காது என்றால் சரிதான்.

01.03.2017ல் வா.சா.ஆ.1 பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ற்கான 1ம் பிரதிவாதிக்கு எவ்வித தொகையும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்யப்பட்டபோது நேரம் என்ன இருக்கும் என்றால் காலை சுமார் 09.00 மணி இருக்கும். வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்தது யார் என்றால் 1ம் பிரதிவாதி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் சுவாதினத்தை 1ம் பிரதிவாதி ஒப்படைத்ததற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை, அன்று மாலை செல்வராஜ் என்பவர் எங்களிடம்


SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.11.14 16:50:12 +0530

சாவியை ஒப்படைத்தார்.

செல்வராஜ் என்பவர் எங்களிடம் சாவியை ஒப்படைக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் சுவாதினத்தை எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பெயரில் இருந்த வரி விதிப்பு தற்போது 2ம் பிரதிவாதி பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் வில்லங்கத்தில் துலங்காது என்றால் சரிதான்.

எனது பிராதில் பத்தி 19ல், 28.05.2015 அன்று கிரைய ஒப்பந்தத்தில் கிரைய தொகையாக ரூ.48,00,000/- பேசி அதில் ரூ.29,00,000/-ஐ கிரைய முன் பணமாக 1ம் பிரதிவாதியிடம் வழங்கி மீதம் ரூ.19,00,000/-ஐ பாக்கி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே பத்தியில், 1ம் பிரதிவாதி கிரையம் எழுதிக் கொடுக்க முன்வராததால் எனது அம்மா 1ம் பிரதிவாதிக்கு எதிராக தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை இவ்வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

மேற்படி வழக்கில் வழக்கு எண் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. பிராது 19வது பத்தியில், 01.10.2018ல் எனது அப்பாவும், 1ம் பிரதிவாதியும் சமாதானம் ஆகி 14 பத்திரம் எழுதியதாகவும், அதில் நான்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 14 பத்திரத்தில் வா.சா.ஆ.1 ஆவணம் அடங்குமா என்றால் இல்லை. அன்றைய தினம் பதிவு செய்த 4 பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். அன்றைய தினம் பதிவு செய்யப்படாத 10 ஆவணம் எனது கைவசம் உள்ளதா என்றால் இல்லை, மேற்படி ஆவணங்கள் எனது அம்மாவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தூத்துக்குடி நீதிமன்றத்தில் உள்ளது.

மேற்படி ஆவணங்கள் எனது அம்மாவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தூத்துக்குடி நீதிமன்றத்தில் உள்ளது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.



SIVA RAJESH M Digitally signed by SIVA RAJESH M Date: 2025.11.14 16:50:19 +0530

மேற்படி 10 ஆவணங்களின் கிரைய தொகை எவ்வளவு என்று சொல்லமுடியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 01.10.2018 ல் 1ம் பிரதிவாதியும் எனது அப்பாவும் சமாதானமாக பேசும்போது வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி பேசிக் கொண்டோமா என்றால் இல்லை. மேற்படி 4 பத்திரம் பதிந்து, 10 பத்திரம் பதிவு செய்யாமல் போனதற்கு என்ன காரணம் என்றால் அன்றைய தினம் இணையத்தில் குழறுபடி ஏற்பட்டுவிட்டது, அதனால் 4 பத்திரம் மட்டுமே பதிவு செய்ய முடிந்தது, 10 பத்திரத்தை பதிவு செய்ய முடியாமல் ஆகிவிட்டது, 1ம் பிரதிவாதிக்கு மொத்தம் 9 பெண்குழந்தைகள், 3 ஆண் குழந்தைகள் அதில் சில குழந்தைகள் வெளிநாட்டிலும், வெளியூரிலும் இருந்ததால் அவர்களால் அன்றைய தினம் பதிவு அலுவலத்திற்கு வர முடியவில்லை, மறுநாள் பதிவு செய்வதற்கு பதிவு அலுவலத்திற்கு வருவதாக கூறினார்கள், குழந்தைகள் அனைவரும் வெளிநாட்டிலும், வெளியூரிலும் இருந்து பேத்தி திருமணத்திற்கு வரும்போது பதிந்து தருவதாக கூறினார், திருமணத்திற்கு நாங்கள் சென்றிருந்தோம், அப்போது பதிவு செய்து தருமாறு கேட்ட போது பிறகு பதிவு செய்து தருவதாக கூறினார், ஆனால் பதிவு செய்து தரவில்லை. மேற்படி சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

01.10.2018 ல் 14 பத்திரமும் தயார் செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதிதான் பத்திரத்தை தயார் செய்தார், ஆனால் அவர் அன்றைய தினம்தான் 14 பத்திரத்தை தயார் செய்தாரா என்று தெரியாது, 1,2 நாட்களுக்கு முன்பாக தயார் செய்திருக்கலாம். வா.சா.ஆ.1 ஆவணம் 01.10.2018 க்கு ஒரு வருடம் முன்பாகவே தயார் செய்யப்பட்டது என்றால் 2017 ல் தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால் வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் அனுபவம் எங்களிடம் இருந்ததால் நாங்கள் 01.10.2018 அன்று வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி 1ம் பிரதிவாதியிடம் பேசவில்லை.

வழக்கு சொத்தின் அனுபவம் ஒருபோது எங்களிடம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை கிரையம் வாங்கிய விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் இவ்வழக்கை தொடர்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக தெரிய வந்தது. நான் தாக்கல் செய்த பிராதில் 16 வது பத்தியில், 21.08.2018 ல் தான் 1ம் பிரதிவாதி


SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.11.14 16:50:25 +0530

2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்திகை கிரையம் கொடுத்த விபரம் தெரிய வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அதிலிருந்து 2 மாதங்கள் பிறகுதான் 01.10.2018ல் எங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கு சமாதானம் ஏற்பட்டு 4 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வில்லங்கம் உட்பட அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்த பின்புதான் 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற நல்லெண்ண கிரையதாரர் என்றால் சரியல்ல, மோசடியாக பத்திரம் பதிவு செய்து கொடுத்துவிட்டார்கள். 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை கிரையம் பெற்ற பிறகு இதுநாள்வரை வழக்கு சொத்தின் சுவாதினத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, என்னிடம் தான் அனுபவம் உள்ளது.

வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தை நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து உற்பத்தி செய்தோம் என்றாலும், அதனால் அதை நிறைவேற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் நாங்கள் மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தையும் நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் 01.10.2018க்கு பிறகு இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்வதற்கு நான் 2ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும், அதனால் 28.08.2018ல் 2ம் பிரதிவாதி வழக்கு சொத்திலிருந்து என்னை வெளியேற்ற முயற்சித்ததாக பிராதில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை முழுமையாக இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு கூறியுள்ள வழக்கு மூலம் தவறானவை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.11.14 16:50:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.